


09.09. 2026 – 13.45 PM

## தலைப்புச் செய்திகள்

சமூகத்தில் நல்லிணக்கத்துடன் வாழும் கலையை அறிவுத்திறன் பயிற்றுவிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

பிளாஸ்டிக் பைகளை அரசு மருத்துவமனைகளுக்கு கொண்டு வர தடை விதிக்கப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

பொங்கல் பண்டிகை ஒட்டி இந்த ஆண்டு கூடுதல் தரத்துடனும் எண்ணிக்கையிலும் விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கப்படும் என்று மாநில கதர் துறை அமைச்சர் திரு.விஜய் பாலாஜி கூறியுள்ளார்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் இன்று தொடங்கின.

இனி விரிவான செய்திகள்

------------

பிரதமர்

நல்லாட்சிக்கு ஈடான அறிவுசார் திறன் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சக்தியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் சமஸ்கிருத மேற்கோளை பகிர்ந்துள்ள பிரதமர், அறிவுத்திறன் ஞானத்தையும், வளத்தையும் முன்னெடுத்துச் சென்று மகிழ்ச்சியையும், சுயமரியாதையையும் உறுதிசெய்வதாக எடுத்துரைத்தார்.

சமூகத்தில் நல்லிணக்கத்துடன் வாழும் கலையை அறிவுத்திறன் பயிற்றுவிப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

------------

அன்னபூர்ணா தேவி

தேசிய ஊட்டச்சத்து மாதம் ஆளுமையுடன் கூடிய இந்தியாவை உருவாக்க இன்றியமையா பங்காற்றும் என்று மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

வாரணாசியில் ஒன்பதாவது தேசிய ஊட்டசத்து மாதத்தை இன்று துவக்கி வைத்துப் பேசிய அவர், ஊட்டச்சத்து இயக்கம் தாய் – சேய் ஆரோக்கியத்தையும், குடும்பங்களின் வளத்தையும் உறுதி செய்வதாக கூறினார்.

சமச்சீரான ஊட்டச்சத்தே வளமான தேசத்தின் வலுவான அடித்தளம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

------------

நிதின் நபின்

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் 25 ஆண்டுகால பொதுப்பணியை எடுத்துரைக்கும் வகையில் பிஜேபி சார்பில் வரும் 17ஆம் தேதி மக்கள் நல சேவை இயக்கம் தொடங்கப்பட உள்ளதாக கட்சியின் தேசிய தலைவர் திரு.நிதின்நபின் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தலைமைத்துவத்தின் கீழ், உலக அளவில் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

ஒரு மாத காலம் நடைபெறும் இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக ரத்த தான முகாம்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

கிராமங்களையும், நகர்ப்புறங்களையும் இணைத்து பிரதமருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஜோதி கலச யாத்திரை நடைபெறும் என்றார்.

------------

இடைத்தேர்தல்

தமிழ்நாட்டில் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 6 ஆம் தேதி நடைபெறும் இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 16-ம் தேதி கடைசிநாளாகும்.

வரும் 17-ம் தேதி அவை பரிசீலிக்கப்படுகின்றன.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 9 ஆம் தேதி நடைபெறும்.

இந்நிலையில், மதுராந்தகத்தில் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தல் அலுவலரின் உத்தரவிற்கு ஏற்ப 9க்கும் மேற்பட்ட பறக்கும் படை வாகனங்களும் கண்காணிப்பு பணியை முடுக்கி விட்டுள்ளன.

இதனிடையே மேற்கு வங்கத்தில் 2 தொகுதிகளுக்கும்

அசாம், புதுச்சேரியில் தலா ஒரு தொகுதிக்கும், அடுத்தமாதம் 6-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

புதுச்சேரியில் இடைத்தேர்தல் நடைபெற உள்ள தட்டஞ்சாவடி தொகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பரிசோதிக்கும் பணிகள் தொடங்கியுள்ளன.

------------

கீர்த்தனா

தமிழகத்தில் தொழில், உற்பத்தி, முதலீடு வாய்ப்புகள் குறித்து மாநில தொழில் துறை அமைச்சர் செல்வி.கீர்த்தனா, கஸகஸ்தான் வர்த்தக துணை அமைச்சர் அய்த்தாருடன் சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.

அந்நாட்டின் உயர்நிலை வர்த்தக குழுவினரை சந்தித்த அமைச்சர், தமிழகத்தில் கஸகஸ்தான் நாட்டின் முதலீடுகளை மேம்படுத்துவது குறித்து விவாதித்தாக தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

------------

அருண்ராஜ்

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளின் பார்வையாளர்களுக்கு நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக மாநில மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நோயாளிகளை காண வருபவர்கள் மதியம் ஒரு மணி முதல் 2 மணி வரையும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையும் அனுமதிக்கப்படுவர் என்றார்.

தனியார் மருத்துவமனைக்கு இணையாக அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தவும், அரசு மருத்துவமனைகளில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தவும் இந்நடவடிக்கை என்றார்.

மருத்துவமனைகளுக்கு பிளாஸ்டிக் பைகளில் உணவுப் பொருட்கள் கொண்டு வர தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

........... வாய்ஸ் ................

இதனிடையே, தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை வரும் 25 ஆம் தேதி மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் முதலமைச்சர் தொடங்கி வைப்பார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

------------

விஜய் பாலாஜி

தமிழ்நாட்டில் வரும் பொங்கல் பண்டிகைக்கு இந்த ஆண்டு கூடுதல் தரத்துடனும் அதிக எண்ணிக்கையிலும் விலையில்லா வேட்டி சேலைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில கதர் மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திரு.விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

வேலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டுறவு சங்கங்கள் மூலம் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

காட்பாடியிலுள்ள விளையாட்டு மைதானம் செல்லும் வழியில் ரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கை குறித்து, மத்திய அரசிடம் வலியுறுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

முன்னதாக முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்து மாணவ, மாணவிகளிடையே பேசிய அவர், உடல் ஆரோக்கியத்தையும், ஒழுக்கத்தையும், விடாமுயற்சியையும், தலைமைப் பண்பையும் விளையாட்டு ஊக்குவிப்பதாக எடுத்துரைத்தார்.

திறமையான இளம் வீரர்களை கண்டறிந்து அவர்களுக்கு வாய்ப்பளிப்பதில் முதலமைச்சர் கோப்பை முக்கியப் பங்காற்றுவதாக கூறினார்.

------------

ராஜேஷ்குமார்

தமிழக சுற்றுலாத்துறையை மேம்படுத்த ஆக்கப்பூர்வமான பணிகள் தொடங்கப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.ராஜேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்டத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள 50 கோடி ரூபாய் நிதி உதவியை கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தை சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றுவதே அரசின் நோக்கம் என்றார்.

நாகர்கோவிலில் தகவல் தொழில்நுட்ப பூங்கா திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை செயல்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றார்.

முன்னதாக, முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை அமைச்சர் துவக்கி வைத்தார்.

-----------

முதலமைச்சர் கோப்பை

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் இன்று தொடங்கின.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளான சிலம்பம், மல்லர்கம்பம் உள்ளிட்ட வீர விளையாட்டுகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவியர், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளளன.

திருச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரதீக் தாயள் இதனை துவக்கி வைத்தர்.

அரியலூர், கடலூர், திருப்பத்தூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, நெல்லை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இப்போட்டிகள் இன்று தொடங்கியுள்ளன.

------------

தூத்துக்குடி – வாய்ஸ்

பள்ளிக்கல்வித்துறை சார்பில் கற்றிடு – சுற்றிடு திட்டத்தின்கீழ், தூத்துக்குடியைச் சேர்ந்த 55 அரசுப்பள்ளி மாணாக்கர் பெங்களுர் இஸ்ரோ மையத்தை பார்வையிட்டுள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலரும், மாணவியும் தங்களது அனுபவங்களை செய்தியாளரிடம் எடுத்துரைக்கையில்

............ வாய்ஸ் ...........

------------

நேபாளம்

நேபாள பெருவெள்ளத்தை தொடர்ந்து காட்மண்டு சென்றுள்ள இந்திய தடயவியல் குழு இதுவரை ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட DNA மாதிரிகளை சேகரித்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில், இதுவரை 378 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

இதனிடையே, அங்குள்ள சுரங்கத்திலுள்ள தண்ணீரையும், சேற்றையும் அகற்றி தேடுதல் பணிகளை இந்திய கூட்டு தொழில்நுட்பக் குழு முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.

இப்பணிகள் இன்னும் ஓரிரு நாட்களில் முடிவடையும் எனத் தெரிகிறது.

------------

விநாயகர் சதுர்த்தி

திருப்பூரில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாநகர காவல் ஆணையர் ராஜேஸ்வரி இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இம்மாதம் 17 ஆம் தேதி நடைபெறும் ஊர்வலத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், போக்குவரத்து மாற்றங்கள் போன்றவை குறித்து கேட்டறிந்தார்.

------------

பேட்மிட்டன்

வியட்நாம் ஒப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு மால்விகா பன்சோத், தன் வீ ஷர்மா, ரக்ஷிதா ஸ்ரீ ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

------------

டென்னிஸ்

பிரான்ஸ் சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் அதில் கல்யாண்பூர் – சுவீடனின் ஆலிவர் ஜோகன்ஸன் இணை இன்று களமிறங்குகிறது.

-------------

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

-------------